DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 161/2023 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **காசிநாதன்** |
| Father's Name | : | **சதாலிங்கம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிவல்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயா எனது மனைவி ஆவார். சாட்சி போஸ் எனது பங்காளி ஆவார். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி வெள்ளைச்சாமி என்பவர் எனது சித்தப்பா ஆவார். எதிரி சோனைமுத்து சித்தப்பா மகன் தம்பி முறையாவர். கடந்த 03.12.2022 ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும் எனது மனைவியும் என்பவரும் கட்டையன்நடப்பு என்ற இடத்தில் உள்ள எங்களது வயலுக்கு நானும் எனது மனைவியும் சென்றோம். அந்த இடத்தில் நாங்கள் எங்களது இடத்தில் இருந்த புல்லை வெட்டி வரப்பில்போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி வெள்ளைச்சாமியின் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவர் அங்கு வந்தார்.

2. பின்பு முத்துக்கிருஷ்ணன் என்னிடம் புல்லை வெட்டி இங்கு போடக்கூடாது என்று சொல்லி என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். என்னை திட்டி விட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு அன்றைய தினம் காலை 9.00 மணியளவில் எதிரி வெள்ளை சாமி மற்றும் அவரது மகனானா எதிரி சோனைமுத்து என்பவரும் நாங்கள் வேலை செய்துகொண்டிருந்த அதே இடத்திற்கு வந்தனர். பின்பு எதிரி சோனைமுத்து என்னிடம் என் தம்பி முத்துகிருஷ்ணன் அடித்தது யார்என்று கேட்டார். நான் அடிக்கவில்லை என்று சொன்னவுடன் எதிரி சோனைமுத்து தனது கையில் வைத்திருந்த கத்தியால் எனது வலது பக்க நெஞ்சில் குத்தினார். மீண்டும் அதே கத்தியால் எனது வலதுபக்க தொடையிலும் குத்தினார். இடது கை முழங்கையில் குத்தினார். ( *சாட்சி தனது சட்டையை கழற்றி தனது வலது பக்க மார்பில் உள்ள காயத்தழும்பு மற்றும் இடது முழங்கையில் உள்ள காயத்தழும்பையும் நீதிமன்றத்தில் காண்பிக்கிறார். வலது பக்க தொடையின் மேல்பகுதியில் உள்ள காயத்தழும்பையும் நீதிமன்றத்தில் காண்பிக்கிறார்..).*

3. எதிரி வெள்ளைச்சாமி எனது கழுத்தை நோக்கி வெட்ட வந்தார் அதை நான் எனது வலது கையால் தடுத்த போது எனது வலது கையில் வெட்டு பட்டு காயம் ஏற்பட்டது. ( *சாட்சி தனது வலது கையில் உள்ள கட்டைவிரலில் உணர்வு இல்லை என்று கூறுகிறார். வலது கையில் உள்ள கட்டைவிரல் பகுதியில் காயத்தழும்பு உள்ளதாக கூறுகிறார்.* ). எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு செல்லும்வரை எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. நான் மயக்கம் தெளிந்து பார்த்த போது நான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகு விசாரித்தபோது எனது மனைவி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்து அதன் பிறகு மேல்சிகி்ச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு வந்த விபரம் எனக்கு தெரியவந்தது.

4. நான் காயம்பட்டது சம்பந்தமாக எனது மனைவி புகார் வாக்குமூலம் கொடுத்தார். நான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் 2 மாதங்களாக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தேன். சம்பவத்தில் பயன் படுத்தப்பட்ட தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தி எதிரி சோனைமுத்து என்னை தாக்க பயன்படுத்தியதாகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் எதிரி வெள்ளைச்சாமி என்னை தாக்க பயன்படுத்தியதாகும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னைமதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை : வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 15:50:03 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**